


. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்

DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936




www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 16.07.2026 • மலர் 04 • இதழ்: 197 • வியாழக்கிழமை • Edition : Nagercoil • 16.07.2026 • Vol : 04 • Issue : 197 • Page : 4 • Rs. 5/-


காமராஜர் வழியில்

# வளமான தமிழகத்தை உருவாக்க உறுதியேற்போம்

## முதல்வர் விஜய் பேச்சு

சென்னை, ஜூலை 16

"எளிமை, நேர்மை, தியாகம், தொலைநோக்குப் பார்வை, மக்கள் சேவை போன்ற உயரிய பண்புகளால் இந்திய அரசியலில் தனி முத்திரைப் பதித்ததோடு மட்டுமல்லாமல், மக்கள் நலனுக்காக தன் வாழ்நாளை அர்ப்பணித்த பெருந்தலைவர் காமராஜரின் அடிச்சுவட்டில் நாமும் பயணித்து வளமான தமிழகத்தை உருவாக்க உறுதியேற்போம்." என அவரது 124வது பிறந்தநாளை ஒட்டி தமிழக முதல்வர் விஜய் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் பக்கத்தில் பகிர்ந்த பதிவில், "தமிழக த் தின் கிராமங்கள்தோறும் பள்ளிக்கூடங்களைஅமைத்து கல்விக்கண் திறந்து, வறுமையால் வாடிய ஏழைக் குழந்தைகளின் பசியைப் போக்க மதிய உணவுத் திட்டம் தந்த மாமேதை, ஏழைப் பங்காளர், பெருந்தலைவர் காமராஜரின் பிறந்தநாளில் அவரது தியாகத்தையும் சாதனைகளையும் நினைவுகூர்ந்து கல்வி வணக்கத்தை செலுத்துகிறேன்.

கல்விச்சாலைகள் மட்டு மின் றி , நீர்த்தேக்கங்களையும், முக்கிய தொழிற்சாலைகளையும் உருவாக்கி, விவசாயம் மற்றும் தொழில் வளர்ச்சியின் மூலம் தமிழ்நாட்டு மக்களின் வாழ்வில் நிலையான மாற்றத்தை ஏற்படுத்திய மகத்தான தலைவர்.

எளிமை, நேர்மை, தியாகம், தொலைநோக்குப் பார்வை, மக்கள் சேவை போன்ற உயரிய பண்புகளால் இந்திய அரசியலில் தனி முத்திரைப் பதித்ததோடு மட்டுமல்லாமல், மக்கள் நலனுக்காக தன் வாழ்நாளை அர்ப்பணித்த பெருந்தலைவர் காமராஜரின் அடிச்சுவட்டில் நாமும் பயணித்து வளமான தமிழகத்தை உருவாக்க உறுதியேற்போம். கர்மவீரர் காமராஜரின் புகழ் ஓங்குக." எனக் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக சென்னை அண்ணா சாலையில் பல்லவன் இல்லம் முன் வைக்கப்பட்டிருந்த காமராஜர் திருவுருவப் படத்திற்கு அமைச்சர்கள் புடை சூழ மலர் தூவி மரியாதை செலுத்தினார்.



# பரமக்குடி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு ரூ.60.87 கோடியில் புதிய கட்டிடம் திறப்பு

இராமநாதபுரம்
ஜூலை 16

தமிழக முதலமைச்சர் ( ஜீலை 14) காணொலி வாயிலாக இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு ரூ.60.87 கோடிமதிப்பில்புதிதாககட்டப்பட்டு மருத்துவமனை கட்டிடத்தை திறந்து வைத்தார். இந்தநிகழ்ச்சியில்மாவட்ட ஆட்சித்தலைவர்மா.சிவகுருபிரபாகரன், பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் கே. கே. கதிரவன் உள்ளிட்டோர் பங்கேற்று புதிய கட்டிடத்தை பார்வையிட்டனர்.



தற்போது 210 படுக்கை வசதியுடன் செயல்பட்டு வரும் பரமக்குடி அரசு மாவட்டதலைமை மருத்துவமனையில், தினசரி சுமார்800 வெளிநோயாளிகளும், 191 உள்நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகின்றனர். மேலும் மாதந்தோறும் ஆயிரக்கணக்கான ஆய்வக பரிசோதனைகள், அறுவை சிகிச்சைகள் மற்றும் மகப்பேறு சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன. புதிய ஐந்து மாடி மருத்துவமனை மரு கட்டிடத்தில் அவசர சிகிச்சைப் பிரிவு, பொதுமருத்துவப்பிரிவுகள்,□□மன் குழந்தைகள் மற்றும் மகப்பேறு சிகிச்சைப் பிரிவுகள், அறுவை சிகிச்சை அரங்குகள், ஸ்கேன் மற்றும் ஆய்வகவசதிகள்,தீவிரசிகிச்சைப் பிரிவுகள்உள்ளிட்ட அனைத்து நவீன மருத்துவ வசதிகளும் அமைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் மருத்துவமனையின் மொத்த படுக்கை வசதி 400 ஆக உயர்த்தப்பட்டுள்ளது நிகழ்ச்சியில் செயர் பொறியாளர் குருதி வேல், தவெக மாவட்ட செயலாளர் மதன் பரமக்குடி நகர்மன்றத் தலைவர், நகராட்சி ஆணையர், பொதுப்பணித்துறை அதிகாரிகள், மருத்துவத் துறை அதிகாரிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# மயிலாடியில் காமராஜர் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு பேரூர் தவெக சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கி கொண்டாட்டம்

கன்னியாகுமரி
ஜூலை 16

குமரி மாவட்டம் மயிலாடியில் முன்னாள் முதல்வர் காமராஜர் பிறந்தநாளை முன்னிட்டு மயிலாடி பகுதியிலுள்ளஅனைத்து அங்கன்வாடி பள்ளிகளுக்கும் மயிலாடி பேரூர் தவெக சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

அந்த வகையில் மயிலாடி சுப்ரமணியபுரம் அங்கன்வாடி குழந்தைகளுக்கு மயிலாடி பேரூர் தவெக சார்பில் இனிப்புகள் மற்றும் குழந்தைகளுக்கான கல்வி உபகாரணகள் வழங்கப்பட்டது.

நிகழ்ச்சிக்கு தமிழக வெற்றிக் கழக மயிலாடி பேரூர் செயலாளர் சகாய ஜோசப் விஜய் தலைமை தாங்கினார். அகஸ்தீஸ்வரம் வடக்கு வட்டார காங்கிரஸ் தலைவர் தங்கம் நடேசன், மாவட்ட காங்கிரஸ் பொதுச் செயலாளர் மயிலை மோகன், நகர காங்கிரஸ் தலைவர் நடேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு விருந்தினராக குமரி கிழக்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் கே.டி.உதயம் கலந்து கொண்டு குழந்தைகளுக்கான கல்வி உபகரணங்கள் மற்றும் இனிப்புகளை வழங்கினார். இதில் பேரூர் தவெக துணை செயலாளர் சஜின், கிளைச் செயலாளர் ஜெபின், நிர்வாகி டேவிட் உட்பட பலர் கலந்து கொண்டனர்.








# குழித்துறை நகராட்சியை முற்றுகையிட்ட மார்த்தாண்டம் மார்க்கெட் வியாபாரிகள்

மார்த்தாண்டம்,ஜூலை. 16

மார்த்தாண்டம் மார்க்கெட் வியாபாரிகள் குழித்துறை நகராட்சி அலுவலகத்தை முற்று கையிட்டனர்.




மார்த்தாண்டம் காய்கறி மார்க்கெட் ரூ. 15 கோடியில் வணிக வளாகம் கட்டப்பட்டு தேர்தலுக்கு முன்பு கடந்த ஜனவரி மாதம் திறக்கப்பட்டது.உடனடியாக கடைகள் ஏலம் விடப்பட்டு ஏலத்தில் கடைகளை எடுத்த வியாபாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டது. ஆனால் வியாபாரிகளுக்கு குடிதண்ணீர்வசதி, மின்சாரவசதி, தனி தனி மீட்டர் வசதி ஆகியவை செய்து கொடுக்கவில்லை.

அடிப்படை வசதிகள் செய்து கொடுக்காததால் கடை திறக்க முடியாமல் வியாபாரிகள் அவதிக்குள்ளாகி வருகின்றனர். இந்த நிலையில் நகராட்சி அலுவலக அதிகாரிகள் வாடகை கட்டணம் ஏப்ரல் 2026 முதல் செலுத்த வேண்டும் என்று வியாபாரிகளுக்கு அறிவிப்பு நோட்டீஸ் வழங்கியது. ஆனால் வியாபாரிகளின் கோரிக்கைகளை சரி செய்து கொடுக்க வேண்டி வியாபாரிகள் மற்றும் வர்த்தக சங்கத்தினர் தொடர்ந்து நகராட்சி அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்து வந்தனர். ஆனால் அதிகாரிகள் இதனை கண்டு கொள்ளவில்லை.

இதையடுத்து மார்த்தாண்டம் நகர வர்த்தக சங்கத் தலைவர் தினகர் தலைமையில் வர்த்தகர்கள் மற்றும் வர்த்தக சங்கத்தினர் நகராட்சி அலுவலகத்தை முற்றுகையிட்டனர். வணிகர் சங்கங்களின் பேரவை மாநில துணைத் தலைவர் கருங்கல் ஜார்ஜ், மாவட்ட துணை செயலாளர் ஜஸ்டஸ் அமிர்தேயன், நீலகண்டன், மார்த்தாண்டம் காய்கறி வியாபரிகள் சங்க பொருளாளர் குமாரதாஸ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

பின்னர் அதிகாரிகளை சந்தித்து உடனடியாக குடிநீர் மற்றும் மின்சார வசதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்றும், அடிப்படை வசதிகளை செய்து கொடுக்கும் வரை மாதாந்திர வாடகை ரத்து செய்ய வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டனர். இல்லாவிட்டால் தொடர் போராட்டம் நடத்தப் போவதாகவும் அறிவித்தனர். இதை அடுத்து அதிகாரிகளிடம் அவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினர் பேச்சுவார்த்தையில் விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதி அளித்தனர். இதை அடுத்து வியாபாரிகள் மற்றும் வர்த்தக சங்கத்தினர் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

# மார்த்தாண்டம் அருகே டிப்பர் லாரி மோதி வாலிபர் பலி

மார்த்தாண்டம் ஜூலை 16

மார்த்தாண்டம் அருகே டிப்பர் லாரி மோதி வாலிபர் பலியானார்.

மார்த்தாண்டம் அருகே பாகோடை சேர்ந்த விஜயகுமார் மகன்சிஜின்(27). போட்டாபிரின்ட் எடுக்கும் நிறுவனத்தில் பணியாற்றி வந்தார். சம்பவத்தன்று இவர் ஞாறாம் விளையிலிருந்து குருவிக்காட்டுவிளை செல்லும் சாலையில் நடந்து சென்று கொண்டிருந்தார். அப்பொழுது அதி வேகமாக அஜாக்கிரதையாக வந்த டிப்பர்லாரி மோதி சம்பவ இடத்திலேயே சிஜின் பலியானார்.



இதுகுறித்து அஜின் என்பவர் கொடுத்த புகாரின் பேரில் மார்த்தாண்டம் போலீசார் வழக்கு பதிவு செய்து டிப்பர் லாரி டிரைவர் வென்டெலி கோட்டை சேர்ந்த மணிகண்டன் (50) மீது போலீசார்வழக்குபதிவுசெய்து விசாரித்துவருகின்றனர்.

## காமராஜரின் 124 வது பிறந்த நாளில்

# பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களுக்கு கல்வி கட்டணத்தை செலுத்திய குமரி (கி) மாவட்ட தமிழக வெற்றிக் கழகத்தினர்



நாகர்கோவில், ஜூலை 16

கல்விக் கடவுள் பெருந்தலைவர் ஐயா காமராஜரின் பிறந்தநாளை முன்னிட்டு, அவரது "எல்லோருக்கும் கல்வி" என்ற உயரிய இலட்சியத்தைப் போற்றும் வகையில், நாகர்கோவிலில் உள்ள இந்துக் கல்லூரியில் பயிலும் பொருளாதாரத்தில் பின்தங்கிய சுமார் 10 மாணவ, மாணவிகளின் கல்விக் கட்டணத்தை குமரி (கி) மாவட்ட தமிழக வெற்றிக் கழகம் சார்பில் ஏற்று செலுத்தப்பட்டது.

இந்துக் கல்லூரி முதல்வர் ஐயப்பன் முன்னிலையில், தமிழக வெற்றிக் கழகம் குமரி (கி) மாவட்ட இளைஞரணி இணை அமைப்பாளர் Adv. அ.காமராஜ் கண்ணன் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில், மாவட்ட செயலாளர் S.R. மாதவன் அறிவுறுத்தலின்படி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ராஜன் மாணவர்களுக்கான கல்விக் கட்டணத்தை நேரடியாகச் செலுத்தினார்.

ஐயாகாமராஜரைநினைவுகூர்வது புகழாரம் சூட்டுவதில் அல்ல; அவர் காட்டிய கல்விப் பாதையை செயலால் தொடர்வதில் தான் என்பதைதமிழக வெற்றிக்கழகம் இந்தநிகழ்வின்மூலம் மீண்டும் உறுதிப்படுத்தியது. இந்நிகழ்ச்சியில் கழக நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் கல்லூரி நிர்வாகத்தினர் பலரும் கலந்து கொண்டனர்.

## புழல் சிறை கைதி மீது அவதூறு:

# நடவடிக்கை கோரி மதுரையில் தாய் புகார்



மதுரை, ஜூலை 16

சென்னை புழல் சிறையில் உள்ள தனது மகன் குறித்து சமூக வலைதளங்களில் அவதூறு பரப்புவோர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி, மதுரையைச் சேர்ந்த 75 வயது முதியவர் காவல் ஆணையரிடம் புகார் அளித்துள்ளார்.

மதுரை காமராஜபுரம், திரு. வி.க. தெருவைச் சேர்ந்தவர் ஜெயக்கொடி (75). இவரது மகன் ★காளிமுத்து (என்ற) வெள்ளைக்காளி★, தற்போது சென்னைபுழல்சிறையில் தண்டனைகைதியாகஇருந்துவருகிறார். இந்நிலையில், கடந்த மூன்று நாட்களாகச் சில நபர்கள் திட்டமிட்டுத் தனது மகன் குறித்துச் செய்தித்தாள்கள் மற்றும் இன்ஸ்டாகிராம் போன்ற சமூக வலைதளங்களில் அவதூறு செய்திகளைப் பரப்பிவருவதாக ஜெயக்கொடி குற்றம் சாட்டியுள்ளார்.

இது குறித்து அவர் அளித்த புகார் மனுவில், "எனது மகன் எதிர்காலத்தில் தனது குடும்பத்துடன் இணைந்து நல்முறையில் வாழ வேண்டும் என்ற நற்பெயரில் உள்ளார். ஆனால், சில நபர்கள் அவரது பெயருக்குக் களங்கம் விளைவிக்கவும், அவரது எதிர்காலத்தைச் சிதைக்கவும் வேண்டும் என்ற கெட்ட எண்ணத்துடன் இத்தகைய பொய்ப் பிரச்சாரங்களைச் செய்து வருகின்றனர்" என்று தெரிவித்துள்ளார்,.

மேலும், அவதூறு பரப்பும் நபர்களுக்கும் தனது மகனுக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை என்றும், தொடர்ச்சியாக இத்தகைய செயல்களில் ஈடுபடும் நபர்கள் மீது காவல் துறையினர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் தனது மனுவில் வலியுறுத்தியுள்ளார்,.

## கன்னியாகுமரியில்

# பெருந்தலைவர் காமராஜர் சிலைக்கு கலெக்டர், அமைச்சர் மரியாதை



நாகர்கோவில், ஜூலை. 16

கன்னியாகுமரி மாவட்ட செய்தி மக்கள் தொடர்புத் துறையின் கட்டுப்பாட்டில் கன்னியாகுமரி கடற்கரையில் பெருந்தலைவர் காமராஜர் மணிமண்டபம் அமைந்துள்ளது. நேற்று பெருந்தலைவர் காமராஜரின் 124வது பிறந்தநாளை முன்னிட்டுஅன்னாரது திருவுருவச்சிலைக்கு, மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் தலைமை வகித்தார். கன்னியாகுமரி சட்டமன்ற உறுப்பினர் என்.தளவாய் சுந்தரம், நாகர்கோவில் சட்டமன்ற உறுப்பினர் எஸ். ஆஸ்டின் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சுற்றுலாத்துறை அமைச்சர் செ.ராஜேஷ்குமார் சிலைக்கு மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினார். தொடர்ந்து அவர் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில்:

பெருந்தலைவர் காமராஜர் முதல்வராக இருந்த போது 1956 ஆம் ஆண்டு பள்ளிகளில் மதிய உணவு திட்டத்தை அறிமுகப்படுத்தியவர். 1960 ஆண்டு ஏழைப் பிள்ளைகள் அனைவருக்கும் 11ம் வகுப்பு வரை இலவசக் கல்வி அளித்தவர். தெற்கு ஆசியாவிலேயே மிக உயரமான மாத்தூர் தொட்டிப்பாலம் அமைத்தார்.

விடுதலைப் போராட்டத் தொண்டனாக வாழ்வை தொடங்கித் தன்னலமற்ற உழைப்பால், தியாகத்தால், மக்கள் தலைவராக உயர்ந்து, கோடிக்கணக்கான இதயங்களில் குடிகொண்டிருப்பவர் பெருந்தலைவர் காமராஜர். அன்னாரின் பிறந்த நாள் தமிழ்நாடு முழுவதும் கொண்டாடப்பட்டு வருகிறது. ஆண்டுதோறும் தமிழ்நாடு அரசின் சார்பில் பெருந்தலைவர் காமராஜர் பிறந்தநாள் அரசுவிழாவாக கொண்டாடப்பட்டு வருகிறது. இவ்வாறு அமைச்சர் பேசினார்.

நடைபெற்றநிகழ்ச்சியில் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் பா.ஜாண் ஜெகத் பிரைட், மாவட்ட சுற்றுலா அலுவலர் காமராஜ், கன்னியாகுமரி நகர்மன்ற தலைவர் குமரி ஸ்டீபன், கன்னியாகுமரி நகராட்சி ஆணையர் பட்டுசாமி, உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

# சிம்ஸ் மருத்துவமனையில் ஒற்றை துளை எண்டோஸ்கோபிக் அறுவை சிகிச்சை

## பேஸ்மேக்கர் பொருத்தப்பட்ட 84 வயது முதியவருக்கு முதுகுத்தண்டு அழுத்தத்திற்கு வெற்றிகர சிகிச்சை




சென்னை, ஜூலை 16 2026: பல்வேறு நிலைகளில் முதுகெலும்பு நரம்பு சுருக்கம் மற்றும் சிதைகின்ற முதுகெலும்பு பக்க விளைவால் நடக்க முடியாமல் கடும் சிரமத்தை எதிர்கொண்ட 84 வயது முதியவருக்கு, வழக்கமான திறந்தநிலை முதுகுத் தண்டு அறுவை சிகிச்சையைத் தவிர்த்து, ஒரே ஒரு சிறிய துளை வழியே செய்யப்படும் நவீன எண்டோஸ்கோபிக் அறுவை சிகிச்சையைச் செய்து சென்னை சிம்ஸ் மருத்துவமனைநிபுணர்கள் குணமளித்திருக்கின்றனர். வெறும் 8 மி.மீ அளவிலான சிறிய துளை மூலம் மேற்கொள்ளப்பட்ட இந்த அதிநவீன 'யூனிபோர்ட்டல் எண்டோஸ்கோபிக்' சிகிச்சை, முதியவரின் தண்டுவட நரம்பு அழுத்தத்தை முழுமையாக நீக்கி, அவரை மீண்டும் தன் சொந்தக் கால்களில் நடக்க வைத்துள்ளது. இந்தச் சாதனை சிகிச்சையை சிம்ஸ் மருத்துவமனையின் எலும்பியல் மற்றும் தண்டுவட சிகிச்சை நிபுணர்களான டாக்டர் ஜி. வெங்கடேஷ் குமார், டாக்டர் விக்னேஷ் ஜெயபாலன் மற்றும் இதய நோய் நிபுணர் ஆகியோர் அடங்கிய மருத்துவக் குழுவினர் வெற்றிகரமாக நிகழ்த்தியிருக்கின்றனர்.

இதுகுறித்து டாக்டர் வெங்கடேஷ்குமார்கூறுகையில்: "இந்த முதிய நோயாளி கடுமையான வலியால் நடமாட்டமின்றி, எமது மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து வரப்பட்டிருந்தார். தாங்க முடியாத வலியின் காரணமாக அவரால் சில அடி தூரம் வரை கூட நடக்க முடியவில்லை. பரிசோதனையில், அவருக்குத் தண்டுவடத்தில் ஏற்பட்ட வளைவு காரணமாக, இடுப்புப் பகுதியில் நரம்புகள் கடுமையாக அழுத்தப்பட்டிருப்பது தெரியவந்தது. பொதுவாக இதுபோன்ற பாதிப்புகளுக்கு தண்டுவடத்தில் ராடுகள் மற்றும் ஸ்க்ரூக்களைப் பொருத்திப் பெரிய அளவிலான அறுவை சிகிச்சை செய்ய வேண்டி வரும். ஆனால், தண்டுவட சிகிச்சையில் ஏற்பட்டுள்ள நவீன தொழில்நுட்ப வளர்ச்சியால், வெறும் 8 மி.மீ துளை வழியே எண்டோஸ்கோபிக் முறையில் நரம்பு அழுத்தத்தை எங்களால் வெற்றிகரமாக நீக்க முடிந்தது. அறுவை சிகிச்சை முடிந்த அடுத்த சில மணி நேரங்களிலேயே வலி எதுவுமின்றி நோயாளியால் நடக்க முடிந்தது" என்றார்.



# உங்களைத் தேடி உங்கள் ஊரில் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து கலெக்டர் ஆய்வு

மதுரை, ஜூலை, 16

மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா, "உங்களைத்தேடி உங்கள்ஊரில்திட்டத்தின் கீழ்" மதுரை மாவட்டம், பேரரையூர் வட்டம், டி.கல்லுப்பட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் (Block Development Office) மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து துறை சார்ந்த அலுவலர்களுடன் ஆய்வுக் மேற்கொண்டார். இந்த ஆய்வின் போது, வட்டார வளர்ச்சி அலுவலகத்தின் மூலம் கிராமப்புறப் பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வரும் அனைத்து உட்கட்டமைப்பு மற்றும் வளர்ச்சித் திட்டப் பணிகளையும் தொய்வின்றி, நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் விரைந்து முடித்திட வேண்டும் என்றும், முடிவுற்ற திட்டப் பணிகளைத் தாமதமின்றிப் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு உடனடியாகக் கொண்டு வர வேண்டும் அறிவுறுத்தினார்.

## காமராஜரின் 124வது பிறந்தநாளை முன்னிட்டு

# தமிழக வெற்றி கழகத்தினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்




கிருஷ்ணகிரி, ஜூலை 16

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை ரவுண்டானா பகுதியில் அமைந்துள்ள காமராசர் திருவுருவ சிலைக்கு தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது

நிகழ்ச்சியில் தமிழக வெற்றிக் கழகத்தின் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர் முரளி விஜய் கலந்து கொண்டு, மரியாதை செலுத்தினார். பின்னர், அங்கு திரண்டிருந்த பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது இந்நிகழ்வில் தமிழக வெற்றிக் கழகத்தின் நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்

## குமாரசாமிபேட்டையில் ஆணி அமாவாசை விழாயை முன்னிட்டு

# சந்தன காப்பு மற்றும் ரூபாய் நோட்டுகளால் அலங்கரிக்கப்பட்ட ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி அம்மன்



தருமபுரி ஜூலை 16

தருமபுரி நகரம் குமாரசாமிபேட்டையில் அமைந்துள்ள ஸ்ரீ அங்காள பரமேஸ்வரிதிருக்கோவிலில், ஆணிமாதஅமாவாசையை முன்னிட்டு சிறப்பு வழிபாடுகள் வெகுவிமரிசையாக நடைபெற்றன. இவ்விழாவையொட்டி அம்மனுக்கு சிறப்பு அபிஷேகங்கள் மற்றும் மகா ஆராதனைகள் நடைபெற்றன. இதனைத் தொடர்ந்து இரவு நடைபெற்ற சிறப்பு பூஜையில், அம்மனுக்கு சந்தன காப்பு சாத்தப்பட்டு, ரூ.20 லட்சம் மதிப்பிலான ₹500, ₹200, ₹100 மற்றும் ₹50 நோட்டுகளால் பிரம்மாண்டமாக அலங்கரிக்கப்பட்டு பக்தர்களுக்கு அருள் பாலித்தார். மேலும், உற்சவ அம்மனுக்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு, பக்தி பரவசத்துடன் ஊஞ்சல் சேவை நடைபெற்றது. இந்த விழாவில் குமாரசாமிபேட்டை மற்றும் சுற்றுவட்டார பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான பக்தர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டு அம்மனை தரிசித்து வழிபட்டனர். விழா நிறைவில் திருக்கோவில் நிர்வாகம் சார்பில் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.



ஈரோடுமாவட்டம், தாளவாடிவட்டம், ஓங்கல்வாடிபகுதியைச்சேர்ந்தபொதுமக்களிடம் இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பு 2027 குறித்த விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி வழங்கினார்.



# திருவட்டாறு ஆதிகேசவப்பெருமாள் கோவிலில் வரும் 18ம்தேதி பெருந்தமிர்து பூஜை

திருவட்டாறு, ஜூலை. 16

திருவட்டாறு ஆதிகேசவப்பெருமாள் கோவிலில் ஒவ்வொரு ஆண்டும் ஆடி மாதம் 1,2 தேதிகளில் சிறப்பு பூஜைகள் நடைபெறும். மேலும் ஆடிமாதம் முதல் தேதி ஆதிகேசவப் பெருமாளுக்கு பலாக்காயும், கஞ்சியும் நிவேத்யமாகப்படைக்கப்படும்.

இந்த நிலையில் ஒவ்வொரு ஆடிமாதம் 2ம் நாள் பல்வேறுவகையான உணவுப்பதார்த்தங்கள் ஆதிகேசவப்பெருமாளுக்கு படைக்கும் பெருந்தமிர்து பூஜை மிகவும் பிரசித்தி பெற்றதாகும். இந்த பூஜை வரும் 18.ந்தேதி காலை 9 மணிக்குத்துவங்கி மதியம் வரை நடக்கிறது. பெருந்தமிர்து பூஜைக்கு முன்னதாக 49 கலசங்களில் புனி நீர் நிறைக்கப்பட்டு, கலச பூஜை நடக்கிறது. தொடர்ந்து ஸ்ரீதேவி, பூதேவி, ஸ்ரீபலி விக்ரகங்களுக்கு திமிலை மேளம் முழங்க கலசாபிஷேகம் நடக்கிறது. கோவில் தந்திரி கோகுல் கலசபூஜை மற்றும் பெருந்தமிர்து பூஜைகளை நடத்துகிறார்.

ஆடி மாதம் முதல் தேதி (ஜூலை. 17.ம் தேதி) காலையில் ராமாயண பாராயணம் துவங்கும். ஆடி மாதம் 31.ம் தேதி வரை(ஆகஸ்ட்.16) வரை தினமும் காலையில் கோவிலில் ராமாயண பாராயணம் நடைபெறும். இதில் பக்தர்கள் கலந்து கொண்டு பாராயணம் செய்யலாம்.

# ஆவின் பால் தங்கு தடையின்றி கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

## அலுவலர்களுக்கு ஆட்சியர் சரவணன் உத்தரவு



தருமபுரி ஜூலை 16

தருமபுரியில் உள்ள மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய வளாகத்தில் உள்ள ஆவின் பால் பதனிடும் ஆலையை ஆட்சியர் சரவணன் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பால் உற்பத்தியாளர்களிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் பாலின் அளவு, தரம், குளிரூட்டும் எந்திரங்களின் செயல்பாடுகள் பொதுமக்களுக்கு ஆவின்பால் தங்கு தடையின்றி வினியோகிக்கப்படுகிறதா? என்பது குறித்து அலுவலர்களிடம் கேட்டறிந்தார். பின்னர் ஆட்சியர் கூறியதாவது தருமபுரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் கீழ் 245 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் 36 தொகுப்பு பால் குளிர்விப்பு மையங்கள் செயல்பட்டு வருகிறது. பால் உற்பத்தியாளர்களிடம் இருந்து சாராசரியாக நாள் ஒன்றிற்கு 1,51,520 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. அதில் சுமார் 8, 200 லிட்டர் பால் உள்ளூர் விற்பனைக்கு போக மீதம் 1, 43, 320 லிட்டர் பால் சென்னை மாநகர பயன்பாட்டிற்காக அனுப்பி வைக்கப்படுகிறது. தருமபுரி மாவட்டத்தில் பொதுமக்களுக்கு குறித்த நேரத்தில் ஆவின் பால் பாக்கெட், பால் உபபொருட்கள் தங்கு தடையின்றி கிடைப்பதை துறை அலுவலர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். பால் உபபொருட்கள் விற்பனை அதிகரிக்க தேவையான நடவடிக்கைகளை துறை அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டும். மேலும் பால் உற்பத்தியாளர்களுக்கு பால் பணம் மற்றும் ஊக்கத்தொகையை குறித்த காலத்தில் பட்டுவாடா செய்ய வேண்டும். பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்ட பணிகளை விரைவில் முடிக்க வேண்டும். கால்நடை தீவனம் மற்றும் தாது உப்பு கலவை ஆகியவற்றை உறுப்பினர்களுக்கு முறைப்படி வழங்க வேண்டும் இவ்வாறு ஆட்சியர் கூறினார். இந்த ஆய்வின் போது தருமபுரி ஆவின் பொது மேலாளர் மாலதி, பால் துணைப் பதிவாளர் பார்த்திபன் மற்றும் பால் உற்பத்தியாளர்கள், கூட்டுறவு ஒன்றிய அலுவலர்கள் மற்றும் பால்வளத் துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

# கெரிகேப்பள்ளி தொடக்கப் பள்ளியில் கல்வி வள்ளல் காமராசர் விழா



கிருஷ்ணகிரி, ஜூலை 16

கிருஷ்ணகிரி மாவட்டம் மத்தூர் ஒன்றியம் கெரிகேப்பள்ளி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் கல்வி வள்ளல் காமராசர் பிறந்தநாள் விழாவை கல்வி வளர்ச்சி நாளாக மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டத. முதலாவதாக பெற்றோர்கள் மாணவர்கள் ஊரின் முக்கிய பிரமுகர்கள் அனைவரும் காமராசர் படத்திற்கு பூக்களை தூவினர். மாணவர்களுக்கு பேச்சுப் போட்டி ஓவிய போட்டி போன்ற பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டது. காமராசர் புகழ் பாடும் பாடல்களை பாடி நடனம் ஆடினர். போட்டிகளில் பங்கேற்ற மாணவர்கள் அனைவருக்கும் ஷீல்ட் மற்றும் மெடல் வழங்கப்பட்டது. மாணவர்கள் அனைவருக்கும் நோட்டுகள் பேனா பென்சில்கள் வழங்கப்பட்டது. காமராசர் முகமூடியினை மாணவர்கள் அணிந்து காமராசர் கனவினை நனவாக்குவோம் என உறுதியற்றனர். காமராசர் படம் அடங்கிய ஸ்டிக்கர்களை வீட்டு கதவுகள் பீரோக்களில் ஒட்டிக் கொள்ள மாணவர்களுக்கும் பெற்றோர்கள் மற்றும் பொதுமக்களுக்கும் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் பெற்றோர்கள், பொதுமக்கள், பள்ளி மேலாண்மை குழுவினர், ஊரின் முக்கிய பிரமுகர்கள் பழனிசாமி, சிவக்குமார் ஆசிரியர்கள் பங்கேற்று சிறப்பித்தனர்.0



அனைவருக்கும் வணக்கம் உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்டத்தின் மூலம் இன்று(15/7/26) ஊத்தங்கரை வட்டம் சாமல்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில். மாவட்ட ஆட்சித் தலைவர். ச. தினேஷ்குமார்.ஆய்வு மேற்கொண்டார். உடன் ஊத்தங்கரை வட்டாட்சியர் ராஜலட்சுமி வட்டார மருத்துவ அலுவலர் மருத்துவர் ரங்கசாமி மருத்துவர் கவின் மருத்துவர் புனித பிரியா மருத்துவர் மஞ்சுநாதன் உள்ளிட்ட பலர் உள்ளனர்..

# சங்ககிரி ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆய்வு



சேலம், ஜூலை 16

சேலம் மாவட்டம் சங்ககிரி ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் ஆய்வு மேற்கொண்டார். பொது மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளுக்கு முக்கியத்துவம் அளித்து தமிழ்நாடு அரசின் சார்பில் பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த திட்டங்கள் தரமாகவும், உரிய கால அளவில் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதை உறுதி செய்திட வேண்டுமென ஆலோசனை வழங்கினார். இந்த வகையில் நேற்றைய தினம் சேலம் மாவட்டம் சங்ககிரி ஊராட்சி ஒன்றிய இருகாலூர் ஊராட்சியில் வேளாண் பொறியியல் துறையின் கீழ் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தின்சார்பில் 1.38 லட்சம் மதிப்பில் பயனாளிக்கு பண்ணை குட்டை அமைக்கப்பட்டுள்ள பணியினையும், வடுகப்பட்டி ஊராட்சியில் விளையாட்டு மேம்பாட்டு துறையின் சார்பில் 2.60 கோடி மதிப்பில் கட்டப்பட்டு வரும் முதலமைச்சரின் சிறு விளையாட்டு அரங்கத்தின் கட்டுமான பணியினை ஆய்வு மேற்கொண்டார்.

அதேபோன்று வடுகப்பட்டியில் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் படுக்கை வசதி, பல்வேறு பிரிவுகள் ஆய்வகம், கர்ப்பிணி தாய்மார்கள் விவரம், மருந்தகம், கழிப்பறை உள்ளிட்டவற்றை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். மருத்துவ வசதிகள், மருத்துவ பயனாளிகளுக்கு அளிக்கப்படும் சிகிச்சை முறைகள் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தார். மேலும் சுகாதார நிலையத்தின் வளாகத்தில் 15 வது மத்திய நிதி ஆணைய திட்டத்தின் கீழ் ரூபாய் 65 லட்சம் மதிப்பில் கட்டப்பட்டு வரும் கூடுதல் கட்டிடத்தையும் பார்வையிட்டார். அதனை தொடர்ந்து அக்கம்மாபேட்டை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் சார்பில் செயல்படும் அறிவியலின் நியாய விலை கடையின் பொது விநியோகப் பொருட்கள் இருப்பு எடை, விற்பனை விபரம், மக்கள் பயன்பெறும் மொத்த குடும்பத்தினர் எண்ணிக்கை, நியாய விலை கடை செயல்படும் வேலை நேரம் மற்றும் விடுமுறை நாட்கள் போன்ற விவரங்களையும் பராமரிக்கப்படும் பதிவேடுகளையும் பார்வையிட்ட ஆய்வு மேற்கொண்டார்.



வேலூர் மாவட்டம் காட்பாடி ஊராட்சி ஒன்றியம் இளையநல்லூர் ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் மூலம் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சியினை பொதுமக்கள் ஆர்வத்துடன் பார்வையிட்டனர்.


தின தமிழ்

நிருபர்கள் தேவை

"வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக"

தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தினதமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை

தகுதிகள்

குற்ற வழக்குகள் இருக்கக் கூடாது, முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்.




மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்

99944 66200, 70102 64701


# சேலம் சோனா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான வரவேற்பு விழா



சேலம், ஜூலை 16

சேலம் சோனா கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் முதலாம் ஆண்டு மாணவர்களை வரவேற்கும் விதமாக 15.07.2026 புதன்கிழமை காலை 10.00 மணியளவில் கல்லூரியின் ஸ்ரீ வள்ளியப்பா கலையரங்க கூடத்தில் நடைபெற்றது. கல்லூரியின் முதலாம் ஆண்டு மாணவர்களை வரவேற்கும் விதமாக நடைபெற்ற இந்த விழா குத்துவிளக்கேற்றுதலில் துவங்கி இனிதே ஆரம்பமானது. கல்லூரியின் ஆங்கிலத் துறை தலைவர் முனைவர். ஜி.அனுராதா அவர்கள் அனைத்து மாணவர்களையும் வரவேற்றார். கல்லூரியின் தலைவர் திரு சொ. வள்ளியப்பா அவர்கள் தலைமை வகித்தார். கல்லூரியின் துணைத் தலைவர்கள் சொக்கு வள்ளியப்பா, தியாகு வள்ளியப்பா ஆகியோர் முன்னிலை வகித்தனர். சோனா தொழில்நுட்பக் கல்லூரி முதல்வர் முனைவர். எஸ் . ஆர்.ஆர் செந்தில்குமார் அவர்கள் மற்றும் தியாகராஜா பல் தொழில் நுட்பக் கல்லூரி , வள்ளியப்பாபப்ளிக் பள்ளியின் இயக்குநர் முனைவர். வி.கார்த்திகேயன் ஆகியோர் பாராட்டுரை வழங்கினர். கல்லூரியின் முதல்வர் முனைவர் கு.மை காதர் நவாஸ் அவர்கள் முதலாம் ஆண்டு மாணவர்களையும் அவர்களின் பெற்றோர்களையும் வரவேற்று பேசினார். இந்நிகழ்வின்சிறப்பு விருந்தினராக வருகை புரிந்த ஜெய் கிருஷ்ணன் *Partner & Head of investments, Beyond Next Ventures, Bengaluru* அவர்கள் பெற்றோர் மாணவர்களிடையே சிறப்புரை நிகழ்த்தினார். பள்ளி காலத்தில் இருந்து கல்லூரி வாழ்க்கைக்கு அடி எடுத்து வைக்கும் சிறப்பினையும், மாணவர்கள் எவ்வாறு தங்களது திறமைகளை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதையும் குறித்து பேசினார். கல்லூரியின் தலைவர் சொ.வள்ளியப்பா அவர்கள் பேசும் பொழுது மாணவர்கள் கல்லூரி பருவத்தை நன்முறையில் அமைந்து கொண்டு பெற்றோர்களைப் பேணி பாதுகாக்க வேண்டும் என்று அறிவுரை வழங்கினார். இந்த நிகழ்வின் நிறைவாக உயிர்த்தொழில் நுட்பவியல் துறைத்தலைவர் எம் .புவனேஸ்வரி அவர்கள் நன்றி உரை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் முதலாம் ஆண்டு மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் அனைவரும் பெருமகிழ்ச்சியுடன் கலந்துகொண்டு பெருமை சேர்த்தனர்.

### பெருந்தலைவர் காமராஜரின் 124வது பிறந்தநாளை முன்னிட்டு

# தூத்துக்குடி தெற்கு மாவட்ட பாரதிய ஜனதா கட்சி சார்பில் பல்வேறு இடங்களில் மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி



தூத்துக்குடி, ஜூலை 16

பெருந்தலைவர் காமராஜரின்124வதுபிறந்தநாளை முன்னிட்டு, தூத்துக்குடி தெற்கு மாவட்ட பாரதிய ஜனதாகட்சி சார்பில் இன்று பல்வேறு இடங்களில் மரியாதை செலுத்தும் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

தூத்துக்குடி தெற்கு மாவட்ட பா.ஜ.க. அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்த கர்மவீரர் காமராஜரின் திருவுருவப் படத்திற்கு மாவட்ட தலைவர் சித்ராங்தகன் மற்றும் நிர்வாகிகள் மலர் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர். அதனைத் தொடர்ந்து, வ.உ.சி. மார்க்கெட் அருகில் அமைந்துள்ள கர்மவீரர் காமராஜரின் திருவுருவச் சிலைக்கு மாவட்ட தலைவர் தலைமையில் நிர்வாகிகள் மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.இந்த நிகழ்ச்சியில் மாவட்ட பொதுச் செயலாளர்கள் ராஜேஷ் கண்ணன், செல்வராஜ், மாவட்ட துணைத் தலைவர்கள் சிவராமன், வசந்தன் மற்றும் மாநில, மாவட்ட, அணி, பிரிவு நிர்வாகிகள், கட்சித் தொண்டர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு கர்மவீரர் காமராஜருக்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

### நாகர்கோவிலில்

# தமிழ்நாடு அனைத்து வணிகர் சங்கங்களின் பேரமைப்பினர் காமராஜர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை



நாகர்கோவில் ஜூலை 16

தமிழ்நாடு அனைத்து வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் கன்னியாகுமரி மத்திய மாவட்டம் சார்பில் கல்வி கண் திறந்த கர்மவீரர் காமராஜரின் 124 வது பிறந்த நாளை முன்னிட்டு நாகர்கோவில் வேப்பமூடு பகுதியில் அமைந்துள்ள அவரது திருஉருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்ச்சிக்கு கன்னியாகுமரி மத்திய மாவட்டத் தலைவர் குமரன்தலைமை வகித்தார். மாவட்டச் செயலாளர் ம. கோபுராஜ் முன்னிலை வகித்து, கர்மவீரர் காமராஜர் அவர்களின் கல்விப் புரட்சி, நேர்மை, எளிமை மற்றும் மக்கள் நலப் பணிகளை நினைவு கூர்ந்து அவரது புகழுக்கு மரியாதை செலுத்தினார்.

இந்நிகழ்வில் இளைஞர் அணி தலைவர் திலீப், மாவட்ட இணை ஒருங்கிணைப்பாளர் சரண் காந்தி, நிர்வாகிகள் மணிகண்டன், கார்த்தி உள்ளிட்ட பல்வேறு நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

### நாகர்கோவிலில் தவெக குமரி கிழக்கு மாவட்டம் சார்பில்

# பெருந்தலைவர் காமராஜர் 124 வது பிறந்த நாள் விழா மாவட்ட செயலாளர் மாலை அணிவித்து மரியாதை




நாகர்கோவில், ஜூலை 16

பெருந்தலைவர் காமராஜரின் 124வது பிறந்தநாளையொட்டி, நாகர்கோவில் அடுத்த பழவிளை சந்திப்பில் உள்ள அவரதுதிருவுருவச்சிலைக்கு குமரி கிழக்கு மாவட்ட தமிழக வெற்றி கழகம் சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

மாவட்ட செயலாளர் மாதவன் தலைமையில் தமிழக வெற்றிக் கழகத்தினர் மரியாதை செலுத்தினர். இதில் இணைச் செயலாளர் பிரேம்குமார், முன்னாள் அமைச்சர் பச்சைமால், தொழிலதிபர் பால்ராஜ், இளைஞர் அணி அமைப்பாளர் ராஜன், ஆரிப், இணை அமைப்பாளர்கள் தங்கராஜ், மாவட்ட தொண்டரணி இணை அமைப்பாளர் அசோக் செல்லம், அகஸ்தீஸ்வரம் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் மெர்சல் முகேஷ், தோவாளை மத்திய ஒன்றிய செயலாளர் விஜய், மாநகராட்சி மான்ற உறுப்பினர் ஸ்ரீ லிஜா, 11வது வார்டு செயலாளர் ஆனந்த் செல்லம், 12வது வார்டு நிர்வாகிகள் அசோக், மில்டன், உட்பட பலர் கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டார வளர்ச்சி அலுவலகம் அருகில் செயல்பட்டு வரும் இ சேவை மையத்தில், "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" திட்ட கள ஆய்வில், பல்வேறு துறைகள் சார்பாக பொதுமக்களுக்கு வழங்கப்படும் சான்றிதழ்களின் விபரங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன், வட்டாட்சியர் .ராஜலட்சுமி, வட்டார வளர்ச்சி அலுவலர் . உமாசங்கர் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



திருப்பூர் தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் சட்டமன்ற உறுப்பினர் திருப்பூர் மாநகரமாவட்ட செயலாளர் எஸ். பாலமுருகன் அவர்களை சந்தித்து அவர் முன்னிலையில் அசரப் அலி மற்றும் ஜியாவுல்லா பிரதர்ஸ் தங்களை தமிழகவெற்றி கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டார்கள்..

### ராமநாதபுரம் மாவட்டத்தில் ச.ம.க. சார்பில்

# காமராஜரின் பிறந்தநாளை முன்னிட்டு மரக்கன்றுகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா



ராமநாதபுரம், ஜூலை 16

ராமநாதபுரம் மாவட்டத்தில் கல்விக்கண் திறந்த முன்னாள் முதலமைச்சர் பெருந்தலைவர் காமராஜர் 124 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு பல்வேறு இடங்களில் மரக்கன்றுகள் வழங்கி நலத்திட்ட உதவிகள் மற்றும் இனிப்புகள் வழங்கி கொண்டாடினர். சமத்துவ மக்கள் கழகம் நிறுவனர் தலைவர் மற்றும் தமிழ்நாடு பனைமர தொழிலாளர்கள் நல வாரியம் தலைவர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எர்ணாவூர்நாராயணன்வழிகாட்டுதலில் இளைஞர் அணி செயலாளர் கார்த்திக் நாராயணன் மற்றும் சமத்துவ மக்கள் கழகம் தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் விஸ்வநாதன் ஆகியோர் ஏற்பாட்டில் கல்வி, விவசாயம், தொழில்துறை மூன்றிலும் தமிழ்நாட்டை முன்னேற்றிய முன்னாள் முதல்வர் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் 124வது பிறந்தநாள் விழா மற்றும் கல்வி வளர்ச்சி நாள் விழா கிழக்கு ராமநாதபுரம் நாடார் உறவின் முறை சங்க கட்டிடம் முன்பு சிறப்பாக கொண்டாடப்பட்டது. விழாவில் அலங்கரிக்கப்பட்டபெருந்தலைவர் காமராஜர் திருஉருவ படத்திற்கு தீப ஆராதனை காண்பித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர். அதனைத் தொடர்ந்து அப்பகுதியில் உள்ள மக்களுக்கு இனிப்புகள் மற்றும் மரக்கன்றுகள் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் கிழக்கு இராமநாதபுரம் நாடார் உறவின்முறை தலைவர் பழனிச்சாமி நாடார், பொது செயலாளர் உலகநாதன், துணைத் தலைவர் வாசி ராஜன், நாடார் பேரவை மாவட்ட தலைவர் வேல்முருகன், சமத்துவ மக்கள் கழகம் மாவட்ட செயலாளர் கார்த்திகேயன், நாடார் பேரவை மாவட்ட அவைத்தலைவர் ஜார்ஜ், மாவட்ட பொருளாளர் மகேந்திரன், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மேலாளர் பிரசாந்த் குமார் மற்றும் கிழக்கு இராமநாதபுரம் நாடார் உறவின்முறை சங்க நிர்வாகிகள் மற்றும் நாடார் பேரவை, சமத்துவ மக்கள் கழகம் நிர்வாகிகள் கலந்து கொண்டு மலர் தூவி மரியாதை செலுத்தினர். இதனைத் தொடர்ந்து மண்டபம் ஒன்றியம் தாமரைக் குளம் மற்றும் இரட்டையூர் அணி கிராமத்தில் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் திருஉருவ சிலைக்கு சமத்துவ மக்கள் கழகம் மற்றும் நாடார் பேரவை சார்பில் நிர்வாகிகள் உறுப்பினர்கள் பொதுமக்கள் என திரளாக சென்று மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். அப்பகுதியில் உள்ள பள்ளிகளில் மாணவிகளுக்கு கல்விக் கண் திறந்த காமராஜரின் நினைவாக இலவச நோட்புக் பேனா பென்சில் உள்ளிட்ட பொருட்கள் மற்றும் இனிப்பு வழங்கினர்.

### நாகர்கோவில் சிறையில் வியாபாரி அடித்துக் கொலை

# 3 சிறை பணியாளர்கள், 8 விசாரணை கைதிகள் மீது வழக்கு பதிவு: உடலை வாங்க மறுத்து 3ம் நாளாக உறவினர்கள் போராட்டம்



நாகர்கோவில், ஜூலை.16

குமரி மாவட்டம் தென்தாமரைகுளம் ஈத்தன்காடு பகுதியை சேர்ந்தவர் சபரி வர்மன் (34). இவர் அந்த பகுதியில் மளிகை கடை நடத்தி வந்தார். இதற்கிடையில் கடையில் குட்கா புகையிலை விற்றதாக தென்தாமரைகுளம் போலீசார் சபரி வர்மனை கைது செய்து நாகர்கோவில் சிறையில் அடைத்தனர்.

இந்தநிலையில்குமரிமாவட்டபோலீஸ் எஸ் பி ஸ்டாலின், சிறைத்துறை எஸ் பி செந்தாமரைக்கண்ணன் ஆகியோர் சிறையில் விசாரணை மேற்கொண்டனர். அப்போது சிறையில் வைத்து சபரி வர்மன் தாக்கப்பட்டு இருப்பது உறுதியானது.

சபரி வர்மனின் உடல் நீதிபதி சத்திய மூர்த்தி முன்னிலையில் பிரேத பரிசோதனை நடந்தது. இதில் சபரிவர்மன் உடலில் 19 இடங்களில் காயங்கள் இருந்தது தெரியவந்தது. அதைத் தொடர்ந்து நீதிபதி சிறையில் விசாரணை மேற்கொண்டார். இந்த விசாரணையின் போது கிடைத்த ஆதாரங்களின் அடிப்படையில், கடந்த 12ஆம் தேதி இரவு சிறைக்குள் ஏற்பட்ட வாக்குவாதத்தை தொடர்ந்து உயிரிழந்த சபரி வர்மன் சிறைத்துறை பணியாளர்களால் தாக்கப்பட்டிருப்பது தெரிய வந்தது.

தொடர்ந்து நேற்று முன்தினம் இரவு நேசமணி நகர் போலீசார் சிறை காவலர் ஜெகன், தலைமை வார்டன் சுரேஷ், சிறை காவலர் சிவக்குமார் ஆகியோரை கைது செய்தனர். பின்னர் 3 பேரை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி பாளையங்கோட்டை சிறையில் அடைத்தனர். தொடர்ந்து மேலும் போலீசார் நடத்திய விசாரணையில், சபரி வர்மன் சிறையில் அடைக்கப்பட்ட நாளிலிருந்து உணவு சாப்பிடாமல் விரக்தியில் இருந்துள்ளார். கைதிகள் வார்டனிடம் புகார் செய்துள்ளனர். வார்டன்கள் தாக்கிய பின் கைதிகளும் இணைந்து சபரிவர்மனை தாக்கி உள்ளனர். இது தொடர்பாக சிறையில் உள்ள கைதிகள் விஷ்ணு, சாரதி, ஜெகன், சரத், பெருமாள், சேதுராம், அஜித், அரவிந்து ஆகிய 8 பேர் மீது நேசமணி நகர் போலீசார் வழக்கு பதிவு செய்து கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

சபரிவர்மன் உடல் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் பிணவறையில் வைக்கப்பட்டுள்ளது. அவரது உடலை வாங்க உறவினர்கள் மறுத்துவிட்டனர். போலீசார் மற்றும் அதிகாரிகள் பலமுறை சபரி வர்மனின் உறவினரிடம் பேச்சு வார்த்தை நடத்தியும் அவர்கள் சமாதானம் ஆகவில்லை.

இதற்கு இடையே சபரி வர்மன் மனைவியின் வாழ்வாதாரத்தை உறுதி செய்யும் வகையில் அரசு வேலை வழங்க வேண்டும், கலெக்டர் இதற்கான உறுதியை கொடுக்க வேண்டும் அப்போதுதான் சபரி வர்மன் உடலை வாங்குவோம் என்று அவரது உறவினர்கள் கூறி வருகின்றனர். இதற்கு அரசியல் கட்சியினரும் ஆதரவு தெரிவித்து வருகின்றனர். தொடர்ந்து 3வது நாளாக நேற்று சபரி வர்மனின் உடலை வாங்க உறவினர்கள் மறுத்து விட்டனர்.




# மகாமக விழாவை சிறப்பாக நடத்த அனைத்து துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டும்

## தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் ரேவதி கூறினார்

தஞ்சாவூர் ஜூலை 16

மகாமக விழாவை சிறப்பாக நடத்த அனைத்து துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டும் என்று தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் ரேவதி தெரிவித்துள்ளார்

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணத்தில் நடைபெற உள்ள மகாமக திருவிழாவை முன்னிட்டு சைவ மற்றும் வைணவ கோயில்களில் தேரோட்டங்கள், சுவாமி வீதி உலா, தெப்பம் மற்றும் மகாமக குளம், காவிரி ஆற்றில் தீர்த்தவாரி, உள்ளி ட்ட நிகழ்ச்சிகள் நடக்க உள்ளது இந்த திருவிழா சிறப்பாக நடத்த அனைத்து துறை அலுவலர்களுக் கான ஒருங்கிணைப்புக்குழு ஆய்வு கூட்டம் கும்பகோணம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நடந்தது .கலெக்டர் ரேவதி தலைமை தாங்கினார்

காவல் கண்காணிப்பாளர் சுந்தரவதனம் முன்னிலை வகித்தார்

கூட்டத்தில் கலெக்டர் ரேவதி பேசியதாவது

கும்பகோணத்தில் உள்ள கோவில்கள், மகாமக குளத்தைச் சுற்றிலும் மின் கம்பிகளை பூமிக்கு அடியில் அமைப்பது குறித்தும், கும்பகோணம் மாநகராட்சி சார்பில் அனைத்து பகுதிகளுக்கும் தேவையான அடிப்படை வசதிகள் செய்து தர உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். மகாமகத்தை சுற்றியுள்ள குளங்களிலுள்ள ஆக்கிரமிப்பு களை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்

மகாமக குளத்தில் நீராடி செல்லு ம் மாற்றுத் திறனாளிகள் தனியாகவும், பக்தர்களுக்கு உடைமாற்றும் அறை, மற்றும் கழிவறைகள் அமைக்கப்பட வேண்டும். குடிநீர் குழாய் வசதி ஏற்படுத்த வேண்டும் நெடுஞ்சாலைத்துறை சார்பில் கும்பகோணம், மன்னார்குடி சாலை, கும்பகோணம் சீர்காழி சாலை, மற்றும் கும்பகோணம் காரைக்கால் சாலை ஆகிய சாலைகளில் மேம் பாடு பணிகளை மேற்கொள்வதோடு போக்குவரத்து துறை சார்பில் தற்காலிக பஸ் நிலையங்கள் அமைக்கப்பட வேண்டும். அதோடு கூடுதல் பஸ்கள் இயக்கவேண்டும் மேலும் மகாமக நிகழ்வுக்காக அனைத்து துறைகளிலும் இருந்து மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளும் முன்னதாக முடித்து நடைபெற்றுள்ள மகாமக திருவிழாவை சிறப்பாக நடத்த அனைத்து துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்

தொடர்ந்து தற்காலிக வாகன நிறுத்துமிடம் மற்றும் பஸ் நிலையங்கள் அமைக்க தேர்வு செய்யப்பட் டுள்ள இடங்களில் ஆய்வு செய்தார் அப்போது அந்தப் பகுதிகளின் மேற்கொள்ள வேண்டிய அடிப்படை வசதிகள் குறித்து தொடர்புடைய அலுவலர்களுக்கு ஆலோசனை செய்தார் .

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் தியாகராஜன், திட்ட இயக்குனர் தேவராஜன், வருவாய் கோட்டாட்சியர் திருமலை கும்பகோணம் மாநகராட்சி ஆணைய சுதா மற்றும் பலர் கலந்து கொண்டனர்

# சந்தையடியில் காமராஜர் பிறந்த நாள் விழா



தென்தாமரை குளம்., ஜூலை.16.

சந்தையடியில் ஊர் பொது மக்கள் சார்பில் நேற்று காலை காமராஜரின் 124வது பிறந்தநாள் விழா படிப்பகம் முன்பு கொண்டாடப்பட்டது. விழாவில் அகஸ்தீஸ்வரம் பேரூராட்சி முன்னாள் தலைவர் சந்தையடி எஸ். பாலகிருஷ்ணன் தலைமையில் காமராஜர் உருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி பொதுமக்களுக்கு காலை சிற்றுண்டி மற்றும் இனிப்புகள் வழங்கப்பட்டது..

இந்நிகழ்ச்சியில் மனோகரன், சிவராஜன், நவீன் சுதாகர், அறக்கட்டளை அறங்காவலர்கள் ராஜலிங்கம், பால்ராஜ், விஜய் ஆனந்த் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் குமார் (எ) ராஜா, துரை ராஜன், தானுலிங்க லிபாஸ்கர், பகவதி நாடார், தங்க நாடார், சுதன் மற்றும் பள்ளி மாணவ மாணவிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# தஞ்சாவூர் பெரிய கோவிலில் வராகி அம்மனுக்கு ஆஷாட நவராத்திரி விழா கணபதி ஹோமத்துடன் தொடங்கியது

தஞ்சாவூர் ஜூலை 16

தஞ்சாவூர் பெரிய கோவிலில் வராகி அம்மனுக்கு ஆஷாடநவராத்திரி விழா, கணபதி ஹோமத்துடன் தொடங்கியது



தஞ்சாவூர் பெரிய கோவிலில் உள்ள வராகி அம்மனுக்கு ஆண்டு தோறும் பத்து நாட்கள் ஆஷாட நவராத்திரி விழா கொண்டாடப்பட் டு வருகிறது ..இதில் அம்மனுக்கு நாள்தோறும் மாலையில் அபிஷேகம் அலங்காரமும் நடைபெறும் அதன்படி இந்த ஆண்டுக்கான ஆஷாட நவராத்திரி விழா கணபதி ஹோமத்துடன் தொடங்கியது தொடர்ந்து சிறப்பு வராகி ஹோமம், சிறப்பு அபிஷேக ஆராதனை நடைபெற்றது. இதில் திரளான பக்தர்கள் பங்கேற்று தரிசனம் செய்தனர்

விழாவின் முதல்நாள் வராகி அம்மனுக்கு பல்வேறு வகையான இனிப்புகள் அலங்காரம் செய்யப்பட்டு தீபாராதனை நடைபெற்றது. இதைத் தொடர்ந்து, வராகி அம்மனுக்கு மஞ்சள் அலங்காரமும், சந்தன அலங்காரமும், தேங்காய் பூ அலங் காரமும், மாதுளை அலங்காரமும், நவதானிய அலங்காரமும், வெண் ணை அலங்காரமும்,கனிவகை அலங்காரமும், காய்கறி அலங்கார மும் செய்யப்படுகிறது .

23ஆம் தேதி வராகி அம்மனுக்கு புஷ்ப அலங்காரமும், இரவு கரகாட்டம், ஒயிலாட்டம், செண்டை மேளம், வாண வேடிக்கையுடன் 4 ராஜ வீதி களிலும்,உற்சவர்வீதி உலாவும் நடக்கிறது

விழா ஏற்பாடுகளை அரண் மனை தேவஸ்தான பரம்பரை அறங்காவலர் பாபாஜி ராஜா போன்ஸ்லே ,உதவி ஆணையர் கார்த்திகேயன் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அதிகாரிகள் செய்து வருகின்றனர்

### வலம்புரிவிளை குப்பை கிடங்கில் 2வது நாளாக பற்றி எரியும் தீ

# வட்டவிளை ஆரம்ப சுகாதார நிலைய நோயாளிகள் பாதிப்பு

நாகர்கோவில், ஜூலை. 16

நாகர்கோவில் வலம்புரிவிளை குப்பை கிடங்கில் நேற்று இரண்டாவது நாளாக தீப்பிடித்து எரிகிறது. தீயால் ஏற்பட்ட புகையால் வட்ட விளை ஆரம்ப சுகாதார நிலையம் பாதிப்பு அடைந்துள்ளது.

வலம்புரிவிளை குப்பை கிடங்கில் நேற்று முன்தினம் அதிகாலை 2 மணிக்கு தீ விபத்து ஏற்பட்டது. உடனே மாநகராட்சி ஊழியர்கள் தீயணைக்கும் பணியில் ஈடுபட்டனர். காற்று வேகமாக வீசியதால் தீயின் வேகம் அதிகரித்தது. இதனால் தீயை கட்டுக்குள் கொண்டு வர முடியவில்லை. தொடர்ந்து நாகர்கோவில் தீயணைப்பு நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. மாவட்ட தீயணைப்பு அலுவலர் சத்தியகுமார் தலைமையில் 60 தீயணைப்பு வீரர்கள் 5 தீயணைப்பு வாகனங்களில் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். தீயை அணைப்பதற்கு வேண்டிய தண்ணீர் அனைத்தும் மாநகராட்சி நிர்வாகம் சார்பில் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும் குப்பையின் உள்ளே பிடித்து இருந்த தீயை அணைக்கும் வகையில் பொக்லைன் இயந்திரம் கொண்டு கிளறி விடும் வேலையும் நடந்து வருகிறது. நேற்று 2 வது நாளாக அணைக்கும் பணியில் தீயணைப்பு வீரர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

தற்போது காற்று கிழக்கு திசையை நோக்கி வீசுவதால் வலம்புரி விளை கிழக்கு பகுதியில் உள்ள வட்ட விளை ஊர் மக்கள் பெரிதும் பாதிப்பு அடைந்து வருகின்றனர். குறிப்பாக வட்ட விளை நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு தினமும் நூற்றுக்கும் மேற்பட்ட நோயாளிகள் சிகிச்சைக்காக வருவது வழக்கம். தற்போது இந்த கிடங்கில் இருந்து வரும் புகையால் நோயாளிகள் அதிகம் பாதிப்பு அடைந்துள்ளனர். இது குறித்து தீயணைப்பு துறை அதிகாரிகள் கூறுகையில் தீயை அணைக்கும் பணியில் தொடர்ந்து ஈடுபட்டு வருவதாக தெரிவித்தனர்.

# காங்கிரஸ் சார்பில் காமராஜர் சிலைக்கு மாலை



ஈரோடு ஜூலை 16

மறைந்த முதலமைச்சர் காமராஜர் பிறந்த நாளை யொட்டி ஈரோடு அரசு ஆஸ்பத்திரி அருகே உள்ள அவரது சிலைக்கு காங்கிரசார் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். ஈரோடு மாநகர மாவட்ட தலைவர் ராஜேஷ் ராஜப்பா தலைமையில் நடந்த இந்த நிகழ்ச்சியில் முன்னாள் மாவட்ட தலைவர்கள் திருச்செல்வம் ஈ பி ரவி முன்னாள் கவுன்சிலர் சாம்ராட் அசோக் புனிதன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



த மா கா சார்பில் ஈரோடு காமராஜர் சிலைக்கு அவரது பிறந்த நாளை யொட்டி மாவட்ட தலைவர் விஜயகுமார் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இதில் மாவட்ட இளைஞர் அணி மாவட்ட தலைவர் சுரேஷ் ரபிக் மற்றும் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



தமிழக வெற்றிக் கழகம் கொள்கை தலைவர் கர்மவீரர் காமராஜர் பிறந்த நாள் முன்னிட்டு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார் கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் பி. முகுந்தன் MLA இவ்விழாவில் கலந்துகொண்டமாவட்டதுணைசெயலாளர்இளையப்பன் செய்ற்குழு உறுப்பினர் பயாஸ் பாஷா.ஒன்றிய செயலாளர் சங்கர். சந்திரசேகர். ஹரி. கோவிந்தராஜ். மற்றும் இணைச்செயலாளர் நாகராஜ் . நந்தகுமார் சண்முகம் மாதேயன். பாலா .நகர மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்



ஈரோடு மாவட்டம், தாளவாடி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மாணவ, மாணவியர்களுக்கான வேலைவாய்ப்பு தொழில் நெறி வழிகாட்டு நிகழ்ச்சி மாவட்ட ஆட்சியர் ச.கந்தசாமி தலைமையில் நடைபெற்றது.



ஈரோடு மாவட்டம், கேர்மாளம், ஆசனூரில் வேளாண்மை உழவர் நலத்துறை, துணை வேளாண்மை விரிவாக்க மையம், விதை சேமிப்பு கிடங்கில், விவசாயிகளுக்கு விவசாய சாகுபடிக்கு தேவையான விதைகள் மற்றும் உயிர் உரங்கள் உள்ளிட்ட வேளாண் இடுபொருட்களை மாவட்ட ஆட்சியர் ச.கந்தசாமி வழங்கினார்.

### பெருந்தலைவர் காமராஜ் 124 வது பிறந்தநாள் விழா:

# கிருஷ்ணகிரி இன்ஸ்டியூட் சார்பில் காமராஜர் படத்திற்கு மலர் தூவி மரியாதை

கிருஷ்ணகிரி, ஜூலை 16

பெருந்தலைவர் கல்வி கண் திறந்த காமராஜரின் 124 வது பிறந்தநாள் விழா இன்று நாடெங்கும் கோலாகலமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக கிருஷ்ணகிரியில் விஜய் இன்ஸ்டியூட் சார்பில் இன்று காமராஜரின் பிறந்தநாள்விழாகொண் டாடப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் சமூக நுகர்வோர் நல பாதுகாப்பு சங்க மாநில பொதுச் செயலாளர் டாக்டர் சந்திரமோகன்சிறப்புஅழைப் பாளராக கலந்து கொண்டு காமராஜரின் திருவுருவப்படத்திற்கு




மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

பின்னர் மாணவிகள் அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் விஜய் இன்ஸ்டியூட் நிறுவனத் தலைவர்துரைஎன்கின்ற துரைசாமி தலைமை தாங்கினார்.

மேலும் ஆசிரியர்கள் பிரியதர்ஷினி,ரேமா உள்ளிட்ட விஜய் இன்ஸ்டியூட் மாணவிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

இறுதியாக விஜய் இன்ஸ்டிடியூட் செயலாளர் தமிழ்ச்செல்வன் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

### தருமபுரியில் காமராஜர் பிறந்த நாளை முன்னிட்டு

# தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா



தருமபுரி ஜூலை 16

தருமபுரியில் கர்மவீரர் காமராஜரின் 124 வது பிறந்த நாள் விழா – தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் மாபெரும் நிகழ்ச்சி உதவும் உறவுகள் பவுண்டேஷன் மற்றும் பிரைம் க்ரோ சீட்ஸ் இணைந்து, தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த 200 க்கும் மேற்பட்ட தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் மாபெரும் விழா தருமபுரி ரோட்டரி மஹாலில் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் தருமபுரி சட்டப்பேரவை உறுப்பினர்முனைவர்சௌமியா அன்புமணி சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றி, 200 க்கும்மேற்பட்டதூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி விழாவை சிறப்பித்தார். இந் நிகழ்வில் பிரைம் க்ரோ சீட்ஸ் நிர்வாக இயக்குனர் முத்துக் குமாரசாமி , முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் எஸ்.பி. வெங்கடேஸ்வரன் , பாமக முன்னாள் மாவட்ட செயலாளர் பெரியசாமி , பாமக மாநில துணைத் தலைவர் சண்முகம், காமராஜ், முருகன், முருகசாமி மற்றும் தமிழ்நாடு தூய்மை பணியாளர் & டேங்க் ஆபரேட்டர் சங்க மாநிலத் தலைவர் கிருஷ்ணன், சமூக செயல்பாட்டாளர் புகழேந்தி , கிராம விழிகள் அறக்கட்டளை தலைவர் வெங்கடாசலம் , ஆச்சி மசாலா மேலாளர் சிவா , ஐஸ்வர்யா ஃபுட் ப்ராடக்ட்ஸ் நிர்வாக இயக்குனர் சாமிநாதன், பேராசிரியர் முனைவர் முனிவேல் , தொழிலதிபர் பாரதி, எஸ்.பி.ஐ. லைஃப் இன்சூரன்ஸ் ரகுநாதன் , DKJ சரடு மண்டி நிர்வாக இயக்குனர் லட்சுமி நாராயணன் , தருமபுரி ராகமளிகா மணி உள்ளிட்ட பல்வேறு சமூக ஆர்வலர்கள், தன்னார்வலர்கள், தமிழ் நாடு டேங்க் ஆபரேட்டர் மற்றும் தூய்மை பணியாளர் சங்கத்தின் மாநில, மாவட்ட, நகர பொறுப்பாளர்கள், சமூக அலுவலர்கள், அரசியல் கட்சி பிரமுகர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர். இந்த நிகழ்ச்சியை கவியரசி தொகுத்து வழங்கினார். இறுதியில் உதவும் உறவுகள்பவுண்டேஷன் தலைவர் ராமன் நன்றி கூறினார்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.